**Provincial Superior**
**Province of Chennai**

# Claretian Provincial House

*Post Box 43, Jothi Nagar,*
*(Bharathi Nagar 1st Main Road),*
*Tambaram West, Chennai - 600 045*
*Tamil Nadu, India. Tel: 044-2276 1614*
*E-mail: procmfchennai@gmail.com*

## வாழ்த்துரை

1978-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 24 ஆம் நாள் புனித அந்தோனி மரிய கிளாரட் பங்கு என்று அழைக்கப்படும் நம் பங்கு அன்று "நல்லாயன்பங்கு" என்ற பெயரால் தொடங்கப்பட்டது. அது நம் பங்கிற்கு வரலாறு படைத்த நாள். அன்று தொடங்கியது நம் பங்கின் பயணம். அந்த தொடக்க விழா நம் கிளாரட் பவன் கலையரங்கில் நடந்தேறியது. அந்த விழாவை முன்னால் மதுரைப் பேராயர் ஜஸ்டின் திரவியம் அவர்கள் தலைமை ஏற்றுத் தொடங்கி வைத்தார். இவ்விழாவிற்கு அருட்தந்தை மொந்தோ சே.ச. அவர்கள் வந்திருந்தார். இப்பகுதி மக்களின் கிறித்தவ திருமுன்னிலைக்கு வித்திட்டு நீர்பாய்ச்சி அதை வளர்த்தெடுப்பதற்கு அரும்பாடுபட்டவர்களில் மிகவும் முக்கியமானவர்களில் ஒருவரான அவரது வருகையே அவ்விழாவின் முத்தாய்ப்பாக அமைந்தது. அருட்தந்தை மொந்தோ அவர்கள் அங்கே நுழைந்த போது அங்கு குழுமியிருந்த நம் பங்கு மக்கள் முகங்களில் புன்னகை புத்தொழி வீசியது கண்டு வியந்தேன். மகிழ்ந்தேன். அது ஒரு அருமையான அனுபவம்.

இன்று 42 ஆண்டு கழித்து நம் பங்கு மக்கள் இப்பகுதியில் இறையாட்சி விதையை விதைத்த அந்த மாமனிதருக்கு நினைவுத்தோட்டம் அமைத்து அவரது நினைவை வாழ வைக்கும் முயற்சிகள் பாராட்டுவதற்கு உரியன.

அருட்தந்தை மொந்தோ சே. ச. அவர்கள் தனது 40 ஆம் வயதில் உசிலம்பட்டி பங்குப்பணியாளராகப் பொறுப்பேற்று மிகவும் சிறப்பாக அவரிடம் ஒப்படைக்கப்பட்டவர்களை வழி நடத்தினார். "உமது திருவுளம் நிறைவேறுக" என்பதையே நோக்கமாய்க்கொண்டு 17 ஆண்டுகள் இப்பகுதியில் நற்செய்தி அறிவித்து, கத்தோலிக்க கிறித்துவ சமூகத்தை வழிநடத்தி அதைப் பேணிக் காத்தார். கிறித்துவ நம்பிக்கை பணியை மட்டுமின்றி, குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் எதிர்காலம் சிறக்க அவர்களுக்கு கல்விப்பணியையும் புரிந்து அவர்கள் வாழ்வில் ஒளியேற்றினார். சுற்றூர்களில் சிறு கோவில்களையும், பள்ளிகளையும் அமைத்து மக்கள் இறையன்பிலும் அறிவாற்றலிலும் வளர வழி வகுத்தார். பல்வேறு பங்குக்குழுக்களை அமைத்து நம் பகுதி மக்களுக்கென அவரது இதயத்தில் ஓர் இதமான இடம் அளித்தார். அனைவரோடும் நட்புடன் பழகி, அவர்கள் அன்றாட வாழ்வில் அக்கறை காட்டி, அறிவுறை வழங்கி அவர்கள் நேர்மையான வாழ்வு வாழவும், அவர்கள் குடும்பங்கள் ஆண்டவரின் ஆசியால் நிரபம்பவும் வழிகாட்டினார். "கதாகாலச்செபம்" வழியாக கிறித்த வாழ்வு முறையையும், நற்செய்திக் காட்சிகளையும் படைப்பாற்றலுடன் தன் மக்களுக்குப் படைத்து மக்களைக் கட்டி எழுப்புவதற்காக தன்னை முழுவதும் கையளித்தவர் நம் தந்தை மொந்தோ அவர்கள். அவர் காட்டிய வழியில் சென்று உயர்ந்த பலர் நம் பங்கின் மூத்த தலைமுறையினர்.

Provincial Superior
Province of Chennai

# Claretian Provincial House

Post Box 43, Jothi Nagar,
(Bharathi Nagar 1st Main Road),
Tambaram West, Chennai - 600 045
Tamil Nadu, India. Tel: 044-2276 1614
E-mail: procmfchennai@gmail.com

இன்று நம் பகுதி கிறித்தவத்தின் முன்னோடிகளில் ஒருவரான நம் தந்தையின் கனவுகள் நிறை வேறுவது குறித்து நாம் மகிழ்ச்சி அடைய வேண்டும். நம் ஆண்டவர் இயேசுவின் சீடர்களாக நம் மக்கள் வாழ்ந்து வளர்வதற்கும் அவர்களுடன் உடனிருக்கவும் அவர் கனவு கண்டார். அவரது கனவு இன்று புனித அந்தோனி மரிய கிளாரட் பங்கு என்னும் குடும்பமாக உருவெடுத்து வளர்ந்து வருகிறது. அவர் விட்டுச் சென்ற நற்செய்திப் பணியும், சமூகப்பணியும் அவரது இறை விருப்பத்தை நிறைவேற்றும் வாழ்விற்கு நம் இயேசு ஆணடவர் வழங்கிய கைமாறாக இன்று இப்பகுதியில் ஒளி வீசுகின்றன. அவருடைய சகோதரர்கள், நம் இயேசு சபை அருட்பணியாளர்களின் அருள் ஆனந்தர் கல்லூரியும், நம் கிளரீசியன் சபை நடத்தும் பள்ளிகளும், கருணை இல்லமும், பிரான்சிஸ்கன் அருட்சகோதரிகளின் மருத்துவ பணியும் (மூணான்டிபட்டி), கல்விப்பணியும் (செக்கானூரணி) பாத்திமா அருட்சகோதகளின் கல்விப்பணியும், புனித யோசேப்பு திருக்காட்சி சபை அருட்சகோதரிகளின் கல்விப்பணியும், தூய மரியா அருட்சோதரிகளின் கருணை இல்லம் பணியும், சேவா மிஷினரி அருட்சோதரிகளின் விளிம்பு நிலை வாழ்வு சிறார்கள் பணியும், மற்றும் நம் பங்கில் இருக்கும் குரு மாணவர் பயிற்சி இல்லங்களும் அருட்தந்தை மொந்தோ அவர்களின் பணி தொடர்ந்து பயணிப்பதற்கான சான்றுகள். இவற்றைக்காட்டிலும் நம் பங்கு மக்கள் தன்னார்வத்துடனும், கையளிப்பு உணர்வுடனும் இந்த சிறு மந்தையைக் குடும்பமாகக் கட்டி எழுப்பும் உணர்வும் முயற்சிகளும் நம் தந்தை மொந்தோ அவர்களுக்கு பெருமையும் புகழும் சேர்ப்பதாய் திகழ்கிறது.

நம் தந்தை மொந்தோ அவர்கள் நினைவாக அமைக்கப்படும் தோட்டம், அவரது வாழ்வையும் பணியையும் சுட்டிக் காட்டி, அவரது அடிச்சுவடுகளில் பயணம் செய்ய நம்மை அழைக்கிறது. விதைகள் வேறூன்றி வளர்வது போல், நம் பங்கு மக்களும் இயேசுவின் அன்பில் வேறூன்றி வளர நம்மை அழைக்கின்றது. அவர் தாம் சார்ந்திருந்த இயேசு சபைக்கு உண்மையுள்ளவராக வாழ்ந்தது போல் நாமும் நம் அழைப்பில் உண்மையுடன் வாழ அழைப்பு விடுக்கிறது. அவர் அதிகாலையில் எழுந்து, நாளின் முதல் மணி நேரங்களை ஆண்டவரின் திருமுன்னிலையில் செலவிட்டு ஆற்றல் பெற்ற வாழ்வு நாமும் ஆண்டவரைத் தேட எமக்கு சவால் விடுக்கிறது.

அருட்தந்தை மொந்தோ அவர்களின் நினைவுத் தோட்டம் அமைக்க முயற்சி மேற்கொண்ட நம் பங்குத்தந்தை சூசை அருள் பிரவீன், பங்குப் பேரவைத் துணைத்தலைவர் திரு.பிரபாகரன், பங்குப் பேரவை உறுப்பினர்கள் மற்றும் பங்கு மக்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக்கள்.

CLARETIANS PROVINCE OF CHENNAI PROVINCIAL SUPERIOR

அருட்தந்தை S. சேசுதாஸ் CMF
மறைமாநிலத்தலைவர்.